# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்

## தகவல் ஏடு

## 2018/2019

இடைநிலை, மூன்றாம்நிலைக் கல்வித்துறை
கல்விப்பீடம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவல, நுகேகொட.

தொலைபேசி இல. 011-2853777 நீட்சி 231,398,234
தொலைநகல் 011-2436858
மின்னஞ்சல் postmast@ou.ac.lk
வெப் தளம் - **www.ou.ac.lk**

பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்

# பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் 2018/2019

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் 2018/2019 ஆம் கல்வி ஆண்டில் வழங்கும் பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் பற்றிய பொதுவான தகவல்கள் இத்தகவல் ஏட்டில் தரப்பட்டுள்ளன.

இப்பிரசுரத்தில் செம்மையான தகவலை அளிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும் திறந்த பல்கலைக்கழக ஒழுங்கு விதிகளில் பின்னர் எடுக்கப்படுகின்ற மாற்றங்கள், கொள்கை மாற்றங்கள், நிதி அல்லது வேறு இடர்பாடுகள் காரணமாக ஏற்படும் மாற்றங்கள் என்பவற்றிற்கு இணங்க இத்தகவல் ஏட்டில் தரப்பட்டுள்ள விடயங்கள் மாற்றங்களுக்கும் திருத்தங்களுக்கும் உட்படலாம்

கல்விப்பீடம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவல, நுகேகொட,

# உள்ளடக்கம்

## முதலாம் பகுதி – பொதுத் தகவல்கள்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1.0 | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | | 05 |
| | 1.1 | பாடநெறிகளும் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களும் | 05 |
| | 1.2 | கற்பித்தல் முறைகள் | 09 |
| | 1.3 | மதிப்பீட்டு முறை | 10 |
| | 1.4 | பிராந்திய சேவைகள் | 10 |
| | 1.5 | வேறு சேவைகள் | 11 |
| | 1.6 | கற்கை நிகழ்ச்சித்திட்ட கட்டணங்கள் | 11 |


## இரண்டாம் பகுதி - கற்கை நிகழ்ச்சித்திட்டம்


| | | | |
|---|---|---|---|
| 2.0 | பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் | | 12 |
| | 2.1 | நோக்கங்கள் | 12 |
| | 2.2 | அனுமதித் தேவைகள் | 12 |
| | 2.3 | கற்கை நிகழ்ச்சித்திட்ட உள்ளடக்கம் | 13 |
| | 2.4 | நாட்பாடசாலைகளும் போதனாவகுப்புக்களும் | 14 |
| | 2.5 | கற்பித்தல் மொழி மூலம் | 14 |
| | 2.6. | பிராந்திய/கற்கை நிலையங்கள் | 14 |
| | 2.7 | மதிப்பீடு | 15 |
| | 2.8 | சான்றிதழ் வழங்கல் | 17 |
| | 2.9 | கட்டணங்கள் | 17 |
| | 2.10 | நிகழ்ச்சித்திட்ட ஆரம்பம் | 18 |
| | 2.11 | விண்ணப்பப் படிவம் பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | 18 |

# பகுதி I
# பொதுத் தகவல்கள்

## 1.0 இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் 1980 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட திறந்த பல்கலைக்கழகம், இலங்கையில் உள்ள ஏனைய தேசிய பல்கலைக்கழகங்கள் போன்று ஒரே தன்மையான சட்ட, கல்வி அந்தஸ்தைக் கொண்டதாகும்.

இப்பல்கலைக்கழகம், 18 வயதினையும் அதற்கு மேற்பட்ட வயதினையும் உடையோர் பிரதானமாகத் தமக்கு கிடைக்கும் ஓய்வு நேரத்தில், தமது வீடுகளில் இருந்து கொண்டு சான்றிதழ்கள், டிப்ளோமாக்கள், பட்டங்கள், பட்டமேற்பட்டங்கள் என்பவற்றுக்கு இட்டுச் செல்கின்ற கல்வி நிகழ்ச்சித்திட்டங்களைப் பயிலக் கூடியதாக உருவாக்கப்பட்டுள்ளது.

திறந்த பல்கலைக்கழகம் தமது சொந்த நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்துப் பட்டங்கள், டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள் ஆகியவற்றை வழங்குகின்றது. அது சொந்த முழு நேரப் பணியணியினர்களையும் சொந்த மத்திய வளாகத்தையும் கொண்டுள்ளது. அது தனக்குரிய சொந்தப் பேரவையையும் உடையது. அப்பேரவை நிறைவேற்றுச் சபையாகவும் கல்விச் சபையாகவும் ஆளும் அதிகார சபையாகவும் விளங்குகின்றது.

மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகிய பின்னர் கிடைக்காத அல்லது அவர்கள் பெறாதிருந்த கல்வி வாய்ப்பினை வழங்குவதால், திறந்த பல்கலைக்கழகம் தான் கவர்ந்து கொண்ட மாணவர்களின் நோக்கில் ஒரு வீட்டுக் கற்கைப் பல்கலைக்கழகமாகவும் பிற்பட்ட காலக் கல்வி வாய்ப்பினை வழங்கும் ஒரு பல்கலைக்கழகமாகவும் விளங்குகின்றது. ஏனையோரைப் பொறுத்த வரையில், அவர்கள் ஏற்கனவே பெற்றுக் கொண்ட கல்வியை மேம்படுத்திக் கொள்ளவும் விருத்தி செய்து கொள்ளவும் வாய்ப்புக்களை வழங்குகின்றது. இவ்வாய்ப்பை பூரணமாகப் பெற்றுக்கொள்ள கூடியளவு முயற்சிக்க வேண்டும்.

## 1.1 பாடநெறிகளும் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களும்

திறந்த பல்கலைக்கழக சொல்லாட்சியின்படி **“பாடநெறி”** என்பதனால் கருதப்படுவது பொதுவாக ஒரு கற்கை வருடத்தினுள் பூரணப்படுத்தப்பட வேண்டிய **அடிப்படைக் கற்கை அலகு** ஆகும். அது கட்டாயமானதாகவோ விருப்பத்திற்குரியதாகவோ இருக்கலாம்.

கட்டாயப் பாடநெறிகளும் விருப்பத்திற்குரிய பாடநெறிகளும் சேர்ந்து கற்கை நிகழ்சித்திட்டத்தை அமைக்கின்றன. கற்கை நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தி சான்றிதழ், டிப்ளோமா அல்லது பட்டத்தை பெற்றுக்கொள்வதற்குத் தகுதி பெறலாம். கட்டாயப் பாடநெறி என்பது ஏதாவதொரு கற்கை நிகழ்ச்சித்திட்டக் கட்டமைப்பினுள் அந்நிகழ்ச்சித்திட்டத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மாணவர்களினால் பூரணப்படுத்தப்பட வேண்டிய பாடநெறியாகும். திறந்த பல்கலைக்கழகம் சான்றிதழ், டிப்ளோமா அல்லது

பட்டத்தைப் பெற்றுத்தரும் கல்விசார் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களை முன் வைக்கின்றது.

அவை பின்வருமாறு :

(1) அத்திவார நிகழ்ச்சித் திட்டங்கள்
(2) சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள்
(3) உயர் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள்
(4) டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள்
(5) இளமாணி நிகழ்ச்சித்திட்டங்கள்
(6) பட்டமேற்கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள்
(7) தொடருறு கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்
(8) தனி நிகழ்ச்சித்திட்டங்கள்

அத்திவார கற்கை நிகழ்ச்சித்திட்டம் குறிப்பிட்ட கல்விசார் கற்கை நிகழ்ச்சித் திட்டத்திற்குள் புகுவதற்குரிய வாயிலாகும். இவ்வத்திவாரக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் மட்டம் ஒன்று (F1), மட்டம் இரண்டு (F2) எனும் இரண்டு மட்டங்களில் நடத்தப்படுக்கின்றது.

கலை, வணிகம், விஞ்ஞானம், பௌதிகவியல், உயிரியல் அல்லது தொழில் நுட்பவியல் போன்ற கற்கைத் துறைகளில் ஏதாவதொன்றுக்கான அத்திவார கற்கை நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தும் மாணவர்கள் பாரம்பரிய பல்கலைக்கழகங்களில் குறித்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனுமதிக்கப்படுவதற்குத் தேவையான கல்வி மட்டத்திற்குச் சமமான தகுதியைப் பெறுகின்றனர்.
தனியான நிகழ்ச்சித்திட்டம் யாதாயினும் முதன்மைக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தில் அடங்காத நிகழ்ச்சித்திட்டமாகும். அவை ஒவ்வொரு தனியாளின் தேவையின் அடிப்படையில் சுயாதீனமாகக் கற்க முடியும்.

நிகழ்ச்சித்திட்டங்களின் **கல்விசார் பெறுமானத்தை** காட்டுவதற்காக திறந்த பல்கலைக்கழகம் **'திறமைமட்டம்'** (Credit) எனும் பதத்தைப் பயன்படுத்துகிறது.

''யாதாயினும் ஒரு பரீட்சையில் மாணவர் காட்டும்'' அடைவுமட்டத் தரத்தினை இப்பதம் குறிக்காது. உதாரணமாக க.பொ.த.சா.தர/உ.தரப் பரீட்சைகளில் திறமைச் சித்தி என்பது அடைவு மட்டத் தரத்தினைக் குறிக்கின்றது. ஆனால் இங்கு ''திறமைமட்டம்'' என்பது கல்வியில் பெறுமானம் என்னும் கருத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

பாடநெறியொன்றின் கல்விப்பெறுமானம் '' 18 திறமைமட்டம்'' எனக் குறிப்பிட்டால் சாதாரணமாக வாரம் ஒன்றுக்கு 15 மணித்தியாலங்கள் வீதம் 30 வாரங்களுக்கு அப்பாடத்திற்கு 450 மணித்தியாலங்களைக் கற்பதற்காகச் செலவிட எதிர்பார்க்கப்படுகின்றது என்பது அர்த்தமாகும். பாடநெறிகளுக்கேற்ப சுய கற்றல் காலம் திறமை மட்ட அடிப்படையில் வேறுபடும்.

பொதுவாக ஏதாவதொரு நிகழ்ச்சித்திட்டத்தின் பாடநெறிகளுக்காகக் கல்வியாண்டு ஒன்றில் மாணவர் பதிவு செய்யக்கூடிய ஆகக்கூடிய திறமைமட்டங்களின் எண்ணிக்கை 36 ஆகும். பதிவுசெய்யக்கூடிய ஆகக் குறைந்த பாடநெறி எண்ணிக்கை திறமை மட்டம் 9 க்கு சமனாகும். சாதாரண கற்கை நிகழ்ச்சித்திட்டம் ஒன்றிலோ அல்லது இரண்டிலோ உள்ள பாடநெறிக்கு மேலதிகமாக திறமை மட்டம் 9 ஐ விட அதிகரிக்காத கல்விப் பெறுமானம் அமையும் வகையில் தொடருறு கற்கை பாடநெறிகளுக்குப் பதிவுசெய்ய முடியும்.

இந்நிகழ்ச்சித்திட்டங்களில் ஒவ்வொரு பாடநெறிக்கும் அதற்குரிய குறியீடு ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளது. இவை பின்வரும் வகையில் 7 எழுத்து-இலக்க குறியீடுகளைக் கொண்டுள்ளன.

| | | |
|---|---|---|
| முதல் இரண்டு எழுத்துக்கள் | : | கற்கைத்துறை (அட்டவணை 1) |
| மூன்றாவது எழுத்து | : | நிகழ்ச்சித்திட்டம் (அட்டவணை 2) |
| முதல் இலக்கம் | : | நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய மட்டம்(அட்டவணை 2) |
| இரண்டாவது இலக்கம் | : | திறமை மட்டம் (அட்டவணை 3) |
| கடைசி இரண்டு இலக்கங்கள் | : | தனித்தொடர் இலக்கம். |
| உதாரணமாக | : | STP8501 |

**அட்டவணை 1 : பாடநெறிக்குறியீடு**

| பீடம் | கற்கைத்துறை | குறியீடு |
|---|---|---|
| கல்வி | கல்வி<br>முன் பிள்ளைப் பருவத்தினர் கல்வி<br>விசேட தேவைக்கல்வி | ST<br>EC<br>SN |
| இயற்கை விஞ்ஞானம் | தூய விஞ்ஞானம்<br>பௌதிக விஞ்ஞானம்<br>இரசாயன விஞ்ஞானம்<br>விலங்கியல் விஞ்ஞானம்<br>தாவரவியல் விஞ்ஞானம்<br>கணிதம்<br>தாதிச்சேவை | PS<br>PH<br>CH<br>ZO<br>BT<br>MA<br>NS |
| பொறியியல் தொழில் நுட்பம் | குடிசார் தொழில் நுட்பம்<br>தொலைத் தொடர்பு தொழில் நுட்பம்<br>கம்பியூட்டர் தொழில் நுட்பம்<br>மின்னியல் தொழில் நுட்பம்<br>இலத்திரனியல் தொழில் நுட்பம்<br>எந்திரவியல்<br>பொறியியல்<br>புடைவை தொழில் நுட்பவியல் | TC<br>TL<br>CS<br>TE<br>TN<br>EN<br>TM<br>TT |
| மானுடவியல் சமூகவியல் | மொழிக்கற்கை<br>சட்டம்<br>முகாமைத்துவமும் வர்த்தகமும்<br>சமூக அறிவியல் நிகழ்ச்சித்திட்டங்கள் | LS<br>LW<br>MC<br>SS |

**அட்டவணை 2 : பாடநெறி மட்டங்கள் (இலங்கைத் தகைமைகள் சட்டகத்திற்கு அமைவாக – Sri Lanka Qualifications framework - SLQF)**

| **SLQF மட்டம்** | **சான்றுப்படுத்தல்** |
|---|---|
| 12 | கலாநிதிப்பட்டம் - (Doctor of Philosophy) |
| 11 | முதுத்தத்துவமாணிப் பட்டம் (Master of Philosophy) |
| 10 | முதுமாணிப் பட்டம் - ஆய்வு உள்ளடங்கலாக (Masters with Courswork and Research component) |
| 09 | முதுமாணிப் பட்டம் - ஆய்வு உள்ளடங்காத கற்கைநெறி மட்டும் (Masters by Courswork) |
| 08 | பட்டமேல் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் (Post Graduate Diploma) |
| 07 | பட்டமேல் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் (Post Graduate Certificate) |
| 06 | இளமாணி சிறப்புப் பட்டம் (Bachelors Honours) |
| 05 | இளமாணிப்பட்டம் (Bachelors) |
| 04 | உயர் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் (Higher Diploma) |
| 03 | டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - (Diploma) |
| 02 | உயர் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் (க.பொ.த. உயர் தரத்திற்குச் சமனானது) - (Advanced Certificate) |
| 01 | சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் (க.பொ.த. சாதாரண தரத்திற்குச் சமனானது - (Certificate) |

**அட்டவணை 3 : திறமை மட்டம்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இரண்டாம் இலக்கக் (5ஆம் இயல்பு) குறியீடு | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 0 |
| திறமை மதிப்பீடு | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 0 |

அங்கீகரிக்கப்பட்ட இணைப்பு பாடநெறிகளை தெரிவு செய்வதன் மூலம் ஒரு மாணவன் தனது சொந்த கற்கைத்திட்டத்தினை ஆக்கிக் கொள்ளலாம். வேறுபட்ட திறமை மட்டப் பாடநெறிகளை 36 திறமை மட்டங்களுக்கு மேற்படாதவகையில் தெரிவுசெய்வதன் மூலம் மாணவன் தனது கற்கைத் திட்டத்தினை உருவாக்கிக்கொள்கின்ற சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. (அட்டவணை 3 ஐப் பார்க்க)

ஒரு கல்வி ஆண்டுக்கு ஆகக்கூடியது 36 திறமை மதிப்பீடுகளுக்கே மாணவர் ஒருவர் தம்மைப் பதிவு செய்து கொள்ளலாம் என்பதனைக் கவனத்திற்கொள்ளலாம்.

36 திறமை மட்டங்களுக்குப் பதிவு செய்து கொள்ளும் மாணவர்கள் குறைந்தது வாரத்திற்கு 30 மணித்தியாலங்கள் வீதம் 30 வாரங்களுக்குக் கற்றலுக்காகச் செலவிடல் வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

இவ்வளவு நேரத்தைச் சுய கற்றலுக்காகச் செலவிட முடியாத மாணவர்கள் குறைந்த திறமை மட்டங்களுக்குப் பதிவு செய்யுமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

## 1.2. கற்பித்தல் முறைகள்

திறந்த பல்கலைக்கழகத்தில் பல்வேறு வழிமுறைகளில் கற்பித்தல் நடைபெறும் .

### (1) அச்சிட்ட பாடநூல்கள்

மாணவர்களின் சுயகற்றல் தேவைகளுக்காக வழங்கப்படும் அச்சிட்ட பாடநூல்கள் இக் கற்பித்தல் முறையின் மையமான அம்சமாகும். இவை மாணவர் கற்கவிருக்கும் முதன்மையான விடயங்களை அவர்களுக்கு வழங்குவதுடன் மாணவர் விடயங்களைப் பகுப்பாய்வு செய்ய உதவுகின்ற விரிவுரைகளுக்கு சமமானதொன்றையும் வழங்குகின்றன. இப்பாடநூல்கள் கவனமாக உருவாக்கப்பட்ட சுய மதிப்பீட்டு வினாக்களையும் அளிக்கின்றன. இவை மாணவரின் சுதந்திரச் சிந்தனையையும் பகுப்பாய்வுச் சிந்தனையையும் விருத்தி செய்ய உதவுகின்றன.

### (2) கட்புல – செவிப்புல சாதனங்கள்

இச்சாதனங்கள் குறிப்பாக சுயமாகக் கற்போருக்கு முக்கியமானவை. இவை அச்சிட்ட விடயங்களைக் குறைநிரப்புவதற்கும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் தொடர்பினை ஏற்படுத்துவதற்கும் உதவுகின்றன. மாணவர்களுக்கு எல்லாப் பிராந்திய/மத்திய நிலையங்களிலும் பாடநெறிக்குப் பொருத்தமான கட்புல-செவிப்புல நாடாக்களைப் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் வசதிகள் உள்ளன. விசேடமாக நாவல பிராந்திய கற்கை நிலையத்தில் அதற்கென கட்புல-செவிப்புல மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. வார நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் மு. ப. 9.00 மணி தொடக்கம் பி. ப. 7.00 மணி வரை இந்நிலையம் திறக்கப்பட்டிருக்கும்.

### (3) நாட்பாடசாலைகளும் போதனா வகுப்புகளும்

மாணவர் தாமே கற்கும் நோக்குடன் அச்சிட்ட பாடநூல்கள், கட்புல செவிப்புல பாடங்கள் வழங்கப்பட்ட போதும் அவற்றிற்கு மேலதிகமாக மாணவருக்கு உதவுவதற்காக, நாட்பாடசாலைகள் போதனா அமர்வுகள் மூலம் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய கற்கை மத்திய நிலையங்களில் நடைபெறுகின்றன.

ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்திற்கும் அமைய பிராந்திய நிலையங்களிலும், கற்கை நிலையங்களிலும், கற்பித்தல் நிலையங்களிலும் நாட்பாடசாலைகள், போதனா வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

### (4) நூலக வசதிகள்

எல்லாப் பிராந்திய/ கற்கை நிலையங்களும் மாணவர் உசாத்துணைக்கு ஏதுவாகப் பாடநூல்களைக் கொண்டுள்ளன. நாவலவிலுள்ள பிரதான நூலகம் மாணவர்களுக்காக மு. ப. 9.00 மணியிலிருந்து பி. ப. 7.00 மணிவரை கிழமை நாட்களில் திறந்து இருக்கும். வார இறுதி நாட்களிலும் சில பகிரங்க விடுமுறை தினங்களிலும் மாணவர்களுக்காக மு. ப. 9.00 மணியிலிருந்து பி. ப. 6.00 மணிவரை திறந்து இருக்கும்.

## 1.3 மதிப்பீட்டு முறை

குறிக்கப்பட்ட எண்ணிக்கையிலான எழுத்துமூல ஒப்படைகள், தொடர் கணிப்பீட்டு பரீட்சைகள்(Continous Assessment Test - CAT), செயற்பாட்டு அடிப்படையிலான ஒப்படை என்பவற்றின் ஊடாகவும் பாடநெறியின் முடிவிலுள்ள இறுதிப் பரீட்சைகளினூடாகவும் ஒரு மாணவனின் முன்னேற்றம் பயிற்சி நெறி முழுவதிலும், தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படுகின்றது.

ஒவ்வொரு பாடநெறிக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையான எழுத்துமூல ஒப்படைகளை மாணவர்கள் சமர்ப்பிக்க வேண்டும். மாணவர்களுக்கு இவை திருப்பி அனுப்பப்பட முன்பு இவை பற்றிய கருத்துக்கள்/பின்னூட்டல்கள் தெரிவிக்கப்பட்டு, திருத்தப்பட்டு தரப்படுத்தப்படும்.

பாடநெறியைப் பொறுத்துப் பரீட்சைகள், ஆய்வுகூடச் செய்முறைகள், வெளிக்கள வேலைகள் போன்றவற்றையும் இவ்வொப்படைகள் உள்ளடக்கலாம்.
ஒவ்வொரு பாடநெறிக்கும் தொடர்ச்சியான மதிப்பீட்டுத் திட்டம் பாடநெறி ஆரம்பிக்கையில் மாணவர்களுக்குத் தரப்படும்.

ஒவ்வொரு பாடநெறியின் முடிவிலும் பரீட்சை ஒன்று நடாத்தப்படும். தொடர்ச்சியான மதிப்பீடு, பரீட்சை என்பனவற்றில் பெற்ற மொத்தப் பெறுபேற்றின் அடிப்படையில் ஒவ்வொரு பாடநெறியினதும் இறுதித்தரம் நிர்ணயிக்கப்படும்.

பாடநெறியின் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையானது தொடர்ச்சியான மதிப்பீடுகளில் மாணவன் பெறும் சித்தியில் தங்கியுள்ளது.

ஏதாவது பயிற்சி நெறியில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்ற மாணவர் தகுதி பெறத்தவறுமிடத்து மேற்படி பயிற்சி நெறிக்கு அவர் மீளப் பதிவு செய்தல் வேண்டும்.

இறுதிப் பரீட்சையில் சித்தி பெறத்தவறும் மாணவர்கள் மீளத்தோற்றும் பரீட்சார்த்திகளாக மீண்டும் முயற்சி செய்யலாம். மீண்டும் ஒப்படைகளைச் சமர்ப்பித்து குறிப்பிட்ட பயிற்சி நெறியில் அவர்கள் தோற்றுவதற்கான தகுதி பெறவேண்டியதில்லை.

## 1.4. பிராந்திய சேவைகள்

பிராந்திய / கற்கை நிலையங்கள் பாடநெறிச் சாதனங்களையும், உசாத்துணை நூல்களுக்கான வசதிகளையும் வழங்கும். இது அங்குள்ள வசதிகளைப் பொறுத்து மட்டுப்படுத்தப்பட்டதாக அமையும்.

மாணவர் ஒன்றுகூடி கலந்துரையாடவும் வகுப்பறைக் கற்பித்தலுக்கான சந்தர்ப்பங்களை வழங்கும்.

மத்திய நிலையங்களில் அச்சிட்ட நூல்களைப் பெறவும், ஒப்படைகளைச் சமர்ப்பிக்கவும் முடியும். கொழும்பு, கண்டி ஆகிய நிலையங்களில் ஆய்வுகூடவசதிகள் கிடைக்கும்.

தற்சமயம் திறந்த பல்கலைக்கழக பிரதேச, கற்கை, மத்திய நிலையங்கள் பின்வரும் இடங்களில் அமைந்துள்ளன.

**பிராந்திய மற்றும் கற்கை நிலையங்கள்**

| | | | |
|---|---|---|---|
| **பிராந்திய நிலையங்கள்** | | | |
| WP 10 | கொழும்பு | NP 40 | யாழ்ப்பாணம் |
| CP 20 | கண்டி | EP 60 | மட்டக்களப்பு |
| SP 30 | மாத்தறை | NC 50 | அனுராதபுரம் |
| UP 80 | பதுளை | NW 70 | குருணாகல் |
| SG90 | இரத்தினபுரி | | |
| **கற்கை நிலையங்கள்** | | | |
| SP 32 | காலி | SG 91 | கேகாலை |
| WP 12 | களுத்துறை | NC 51 | பொலன்றுவை |
| SP 31 | அம்பலாங்கொட | NP 41 | வவுனியா |
| NW 72 | குளியாப்பிட்டிய | EP 62 | திருகோணமலை |
| EP 61 | அம்பாறை | UP 82 | புத்தள/மொனராகலை |
| UP 81 | பண்டாரவளை | WP 11 | கம்பஹா |
| CP21 | ஹற்றன் | SP 33 | அம்பலாந்தொட்ட |
| NP 42 | கிளிநொச்சி | NP 43 | முல்லைத்தீவு |
| NW 71 | புத்தளம் | | மன்னார் |

## 1.5 வேறு சேவைகள்

### (i) உணவகம்

பல்கலைக்கழக உணவகத்தில் நியாய விலைகளில் உணவைப் பெற்றுக் கொள்ளலாம். கிழமை நாட்களிலும் உணவகம் தனது சேவையை வழங்குகின்றது.

## 1.6 கற்கை நிகழ்ச்சித்திட்ட கட்டணங்கள்

கற்கை நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பதிவு செய்யும் போதும் கட்டணங்கள் செலுத்துமாறு பணிக்கப்படும் சந்தர்ப்பங்களிலும் அவை காலதாமதமின்றிச் செலுத்தப்படல் வேண்டும். முன் அறிவித்தல் இன்றி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்டணங்களை மாற்றியமைக்கும் அதிகாரம் பல்கலைக்கழகத்திற்குரியது. ஒவ்வொரு கற்கை நிகழ்ச்சித்திட்டத்திற்கேற்பவும் கட்டணங்கள் வேறுபடும். பந்தி இல. 2.9 இன் கீழ் பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய கட்டணங்கள் தரப்பட்டுள்ளன.

# இரண்டாம் பகுதி

# கற்கை நிகழ்ச்சித்திட்டம்

## கல்விப்பீடம்

கல்விப்பீடமானது மூன்று துறைகளைக் கொண்டது.

(i) இடைநிலை, மூன்றாம் நிலைக் கல்வித்துறை

(ii) ஆரம்ப, முன்பிள்ளைப் பருவ கல்வித்துறை

(iii) விசேடதேவைகள் கல்வித்துறை

பின்வருவன இடைநிலை, மூன்றாம்நிலைக் கல்வித்துறை மூலம் நடத்தப்படும் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகும்.

1. கல்விமாணி (இயற்கை விஞ்ஞானம்) பட்ட நிகழ்ச்சித்திட்டம்
2. கல்விமாணி (நாடகமும் அரங்கியலும்) பட்ட நிகழ்ச்சித்திட்டம்
3. பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்
4. கல்வி முதுமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டம்
5. ஆசிரியர் கல்வியில் கலை முதுமாணி பட்டநிகழ்ச்சித்திட்டம் (சர்வதேச)
6. கல்வி தத்துவ முதுமாணி (M.Phil)
7. கல்வி தத்துவ கலாநிதி
8. ஆய்வு முறையியல் - குறுங்கால சான்றிதழ் கற்கைநெறி
9. பல்தரக் கற்பித்தல் - குறுங்கால சான்றிதழ் கற்கைநெறி

## 2.0 பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்

பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்சித்திட்டம் 15 மாத கால அளவைக் கொண்டதாகும்.

## 2.1 நோக்கங்கள்

கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கும் கல்வித்துறையில் சேவையிலுள்ள பட்டதாரி உத்தியோகத்தர்களுக்கும் தொழில்சார் பயிற்சி அளிப்பதே இந் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

## 2.2 அனுமதித் தேவைகள்

விண்ணப்பதாரிகள்

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் குறைந்தது மூன்று (03) வருட காலத்தைக் கொண்ட இளமாணிப்பட்டம் பெற்ற பட்டதாரியாக அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதற்குச் சமமான தகைமைகள் **உடையவராகவும்**
2. அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் சேவையிலுள்ள ஆசிரியராக, அதிபராக, ஆசிரிய ஆலோசகராக அல்லது ஆசிரியர் கல்வியியலாளராக அல்லது இலங்கை கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தராக அல்லது முழுநேர விரிவுரையாளராக (பல்கலைக்கழகம்,தேசிய கல்வியியற் கல்லூரி, தொழிநுட்பக்கல்லூரி, ஆசிரியர் கல்லூரி) அல்லது அரச ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளராக அல்லது செயற்திட்ட உத்தியோகத்தராக (தேசிய கல்வி நிறுவகம்) சேவை புரிபவராக **இருப்பதுடன்,**

3. 2017.10.01 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ நியமனம் பெற்றவராகவும் முதல் நியமனத்திலிருந்து தொடர்ச்சியாக சேவையில் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
4. உங்களின் பட்டம் இலங்கையில் ஏதாவதொரு பல்கலைக்கழகத்தில் பெறப்படாமல் வேறு வெளிநாட்டு/வழிவரு (online) முறையில் பெறப்பட்டதாக இருப்பின் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றதாக இருத்தல் வேண்டும். (வெளிநாடுகளில் பெறப்பட்ட பட்டமாக இருப்பின் மூன்று (03) வருடங்களாக இருத்தல் வேண்டும்).

- **இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் 2018 ஒக்டோபர் 14 ஆம் திகதி நடாத்தப்படும் தெரிவுப் பரீட்சைக்கு (Selection test) விண்ணப்பிக்கத் தகுதி பெற்ற சகல விண்ணப்பதாரிகளும் தோற்றுதல் வேண்டும்.**

- **தெரிவுப் பரீட்சையில் தகுதி பெற்றவர்களினது விபரப் பட்டியல் மாத்திரம் 2018 நொவம்பர் மாதத்தில் பல்கலைக்கழக இணையத்தளமான [www.ou.ac.lk](http://www.ou.ac.lk) இல் வெளியிடப்படும்.**

- **நிகழ்ச்சித் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்களது பதிவு 2018 டிசம்பர் மாதத்தில் நடைபெறும்.**

- **2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெறும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பக் கூட்டத்திற்கு (திசைமுகப்படுத்தல் அமர்வு) பதிவு செய்து கொண்ட சகல மாணவர்களும் கட்டாயம் சமூகமளிக்க வேண்டும்.**

## 2.3 கற்கை நிகழ்ச்சித்திட்ட உள்ளடக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. | STP8501 | கல்வி உளவியல் | |
| 2. | STP8502 | கல்வியின் அடிப்படைகள் | |
| 3. | STP8303 | கல்வி அளவீடும் மதிப்பீடும் | |
| 4. | STP8504 | கல்வித் தொழினுட்பம் | |
| 5. | STP8505 | ஒப்பீட்டுக் கல்வியும் கல்விப் பிரச்சினைகளும் | |
| 6. | STP8306 | கல்வி வழிகாட்டலும் ஆலோசனை கூறலும் | |
| 7. | STP8307<br>**அல்லது**<br>STP8308 | கலைத்திட்ட கொள்கையும் நடைமுறையும்<br>கல்வி முகாமைத்துவம் | இவ்விருபாடங்களில் ஒரு பாடத்தினை மட்டும் தெரிவு செய்க. |
| 8. | STP8309<br>**அல்லது**<br>STP8310<br>**அல்லது**<br>STP8311<br>**அல்லது**<br>STP8312 | சிறுவர் உரிமைகள்<br>ஆரம்பக்கல்வி<br>உள்ளடங்கல் கல்வி<br>பல்தரக்கற்பித்தல் | இப்பாடங்களில் ஒரு பாடத்தினை மட்டும் தெரிவு செய்க |
| | | **கற்பித்தற் பயிற்சி - கட்டாய தொடர் பயிற்சித் திட்டம்** | |
| 9. | STE8811 | கற்பித்தற் பயிற்சி - (10 கிழமை) | |

கல்வித்தொழினுட்பம் (STP8504) என்பதன் கீழ் விசேட கற்பித்தல் முறைகளுக்கு பின்வரும் பாடங்களில் ஒன்று அல்லது இரண்டினைத் தெரிசெய்ய முடியும்.

1. பௌத்தமதம்*/ கிறிஸ்தவம்*/ சைவநெறி*/ இஸ்லாம்*
2. சிங்களம்/தமிழ்மொழி
3. ஆங்கிலம்*
4. வரலாறு / புவியியல் / குடியுரிமைக் கல்வி
5. விஞ்ஞானம்
6. கணிதம்
7. வர்த்தகம்
8. மனைப் பொருளியல்*
9. ஆரம்ப வகுப்புக்களுக்கான ஒன்றிணைந்த கற்பித்தல்*
10. அழகியற்கல்வி
11. ICT தகவல் தொழினுட்பம்

விசேட கற்பித்தல் முறைக்குத் தெரிவு செய்யும் பாடம் / பாடங்களை கற்பித்தற் பயிற்சிக்குப் பொருத்தமானதாக தெரிவு செய்வது உகந்ததாகும்

* மேற்பார்வையாளரின் கிடைக்கும் தன்மை வளங்களைப் பொறுத்து இப்பாடத்திற்கான தெரிவுக்கு அனுமதி வழங்கப்படும்.

## 2.4 நாட்பாடசாலைகளும் போதனா வகுப்புகளும்

அச்சிட்ட பாடங்கள் கல்வி பெறுவதற்கு முக்கிய துணையாக அமையும். இதற்கு மேலதிகமாக கற்கை நிலையங்களில் / பிராந்திய நிலையங்களில் பதின்மூன்று (13) நாட்பாடசாலைகள் நடைபெறும். செயலமர்வுகள், கலந்துரையாடல்கள் செயற்பாடு சார்ந்த வகையிலான நாட்பாடசாலைகள் நடைபெறும். அச்சிட்ட பாடங்களை எளிமைப்படுத்துவதும், மாணவர்களுக்கு அவற்றை கற்க இலகுபடுத்தி அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதுவும் நாட் பாடசாலைகளின் நோக்கமாகும்.

நாட்பாடசாலைக்கு மேலதிகமாக, சிறுகுழுக்களாக ஒழுங்கமைக்கப்பட்டதும் 29 மணித்தியாலங்கள் கொண்டதுமான போதனா வகுப்புக்கள் நடைபெறும். இங்கு மாணவர் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், ஒப்படைகளுடன் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் பொதுப் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடப்படுவதுடன் அவர்களுக்குத் தேவையான வழிகாட்டலும் வழங்கப்படும். முடியுமானவரை மாணவர்களது வதிவிடங்களுக்கு அண்மையில் போதனா வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்படும்.

## 2.5 கற்பித்தல் மொழி மூலம்

பாடநெறிகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் நடைபெறும்.

## 2.6 கற்கை நிலையங்கள்

பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்காக தற்போது பின்வரும் பிரதேச மத்திய நிலையம், கற்கை மத்திய நிலையங்கள் பயன்படுத்தப்படுகின்றன. எனினும் ஒவ்வொரு வருடத்திலும் ஒவ்வொரு மத்திய நிலையத்தையும் தெரிவுசெய்யும் மாணவர் எண்ணிக்கை, மொழிமூலம், மத்தியநிலையத்துடன் இணைந்துள்ள விரிவுரையாளர்களின் எண்ணிக்கை போன்றவற்றைக் கருத்திற்கொண்டு அதனைக் கற்கை நிலையமாகப் பயன்படுத்தவோ அல்லது பயன்படுத்தாது விடவோ கல்விப்பீடம் முடிவுசெய்யும்.

- கொழும்பு*
- கண்டி*
- மட்டக்களப்பு*
- அம்பாறை*
- திருகோணமலை*
- வவுனியா*
- குருணாகலை*
- யாழ்ப்பாணம்*
- ஹற்றன் *
- புத்தளம்*
- பண்டாரவளை*
- பதுளை*
- அநுராதபுரம். *
- மாத்தறை
- காலி
- அம்பலாங்கொட
- இரத்தினபுரி*
- கம்பஹா
- கேகாலை
- அம்பலாந்தொட்ட
- களுத்துறை*
- கிளிநொச்சி*
- முல்லைத்தீவு*
- மன்னார்*

* தமிழ்மொழியில் நாட்பாடசாலைகள் நடைபெறும் கற்கைநிலையங்கள் / கற்பித்தல் நிலையங்கள்

குறிப்பிட்ட கற்கை நிலையங்களில் கற்கும் மாணவர்தொகை, பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களைப் பொறுத்து அங்கு கல்வி நடவடிக்கைகள் நடைபெறுவது தீர்மானிக்கப்படும் என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.

- **குறிப்பு :- தாம் விண்ணப்பித்துள்ள மேலே குறிப்பிட்ட மத்திய நிலையத்தில் மாத்திரமே விண்ணப்பதாரிகள் கல்வி நடவடிக்கைகளுக்காகத் தெரிவு செய்யப்படுவர். எக் காரணம் கொண்டும் அம் மத்திய நிலையத்தையோ மொழி ஊடகத்தையோ மாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.**

## 2.7 மதிப்பீடு

(அ) மதிப்பீடு பின்வரும் முறைகளில் மேற்கொள்ளப்படும்.

**குறிக்கப்பட்ட கட்டாய ஒப்படைகள் ஊடாக மேற்கொள்ளப்படும் தொடர் மதிப்பீடு**

.இவற்றை உரிய தினத்திற்குள் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும். திறமை மட்டம் ஐந்தினைக் (05) கொண்ட சகல பாடநெறிகளுக்கும் மூன்று ஒப்படைகள் வழங்கப்படும். இத்தகைய பாடநெறிகளுக்கு இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு மூன்று ஒப்படைகளையும் பூர்த்தி செய்து கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும் என்பதோடு அம்மூன்று ஒப்படைகளிலும் “C” தரத்தினைப் அல்லது அதனிலும் கூடிய தரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கமைவாக இம்மூன்று ஒப்படைகளினதும் கூட்டுமொத்த தொடர்கணிப்பீட்டு

புள்ளிகளின் (Overall Continuous Assessment Marks – OCAM) சராசரிப்புள்ளி 40 அல்லது அதனிலும் கூடிய புள்ளியாக இருத்தல் வேண்டும் என்பது கட்டாயமானதாகும்.

திறமை மட்டம் மூன்றினைக் (03) கொண்ட பாடநெறிகளுக்கு இரண்டு (02) ஒப்படைகள் வழங்கப்படும் இத்தகைய பாடநெறிகளுக்கான இரண்டு (02) ஒப்படைகளை பூர்த்தி செய்ய வேண்டியதும் கட்டாயமானதாகும் என்பதோடு சகல ஒப்படைகளுக்கும் “C” அல்லது அதனிலும் கூடிய தரத்தினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் அதற்கமைய கூட்டு மொத்த தொடர் கணிப்பீட்டு (OCAM) புள்ளிகள் 40 அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்வது கட்டாயமானதாகும்.

இறுதிப் எழுத்துப்பரீட்சையின் 60% புள்ளிகளும் கூட்டுமொத்த ஒப்படைகளின் (OCAM) 40% புள்ளிகளும் சேர்க்கப்பட்டு ஒவ்வொரு பாடநெறிக்குரிய இறுதிப் புள்ளி தீர்மானிக்கப்படும்

> ☞ **கவனத்தில் கொள்ளவேண்டியது**
> **குறிப்பிட்டவொரு பாடநெறிக்காக இறுதிப்பரீட்சையில் ஒரு மாணவர் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் ஆகக்குறைந்தது 40 ஐ விட குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் அப்பாடநெறிக்கான கூட்டுமொத்த தொடர்கணிப்பீட்டு (OCAM) புள்ளிகள் இறுதிப்பரீட்சைப் புள்ளிகளுடன் சேர்க்கப்படமாட்டாது.**

(ஆ) இறுதி எழுத்துப் பரீட்சை கீழ்க்காணுமாறு அமையும்.

**கட்டம் I** STP8501, STP8502, STP8504
STP8303

**கட்டம் II** STP8505, STP8306,
STP8307/STP8308/
STP8309/STP8310/STP8311/STP8312

**(இ) கற்பித்தற் பயிற்சி STE8811**

கற்பித்தற் பயிற்சி இரண்டு கட்டங்களில் மதிப்பீடு செய்யப்படும்.

**(i) கட்டம் I**

தேர்வுநாடியின் சொந்தப் பாடசாலையில் முதன்மை ஆசிரியர் மேற்படி கட்டம் I இற்கான மதிப்பீட்டைச் செய்வார்
(தொடர் மதிப்பீடு : இப்புள்ளிகள் 40% .இற்கு மாற்றப்படும்)
கட்டம் I இல் சித்தியடைந்தவர்களுக்கு மாத்திரமே கட்டம் II இனை மேற்கொள்வதற்கான தகைமைகள் வழங்கப்படும்.

**(ii) கட்டம் II**

குறிக்கப்பட்ட ஒரு பாடசாலையில் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரினால் கட்டம் II இற்கான மதிப்பீடு செய்யப்படும்.
(இறுதி மதிப்பீடு : இப்புள்ளிகள் 60% இற்கு மாற்றப்படும்)

கட்டம் I இன் 40% புள்ளிகளும் கட்டம் II இன் 60% புள்ளிகளும் சேர்ந்து இறுதிப் புள்ளிகளைத் தீர்மானிக்கும்

**2.7.1 ஆசிரியரல்லாத கல்வித்துறையில் சேவைபுரியும் விண்ணப்பதாரிகள் கவனத்திற்கு**

* **ஆசிரியரல்லாத கல்வித்துறையில் சேவைபுரியும் விண்ணப்பதாரிகள் 10 வாரங்களுக்கு குறையாது தமது கற்பித்தற் பயிற்சியை மேற்கொள்வதற்கு ஒரு பாடசாலையை ஒழுங்கு செய்வது அவர்களது பொறுப்பாகும்.**
* **எனவே ஆசிரியர்கள் அல்லாத கல்வித்துறைப் புலத்தில் சேவைபுரியும் விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களை, எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்திய பின்னர் அழைக்கப்படும் நேர்முகப் பரீட்சையின் போது கொண்டுவரல் வேண்டும்.**

(அ) "கற்பித்தற் பயிற்சி (STE8811) கட்டம் 1 இனை பூரணப்படுத்துவதற்காக ஒரு பாடசாலையை (அரச அல்லது அரச அனுமதிபெற்ற பாடசாலை) நானே தெரிவு செய்து இலங்கை திறந்த பல்கலைக்கழகம் குறிப்பிடும் குறிப்பிட்ட 10 வாரகால இடைவெளியில், அப்பாடசாலை அதிபரிடம் அனுமதி பெற்று அங்கு தொடர்ச்சியான கற்பித்தலில் ஈடுபடுவேன் என உறுதியளிக்கின்றேன்." என்ற உறுதிப்பாடடங்கிய விண்ணப்பதாரியின் கையொப்பத்துடனான கடிதம்.

(ஆ) விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் தொழிலில் ஈடுபட்டிருக்கும் விண்ணப்பதாரி கற்பித்தற் பயிற்சி (STE8811) கட்டம் I இனை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் குறிப்பிடப்படும் 10 வாரங்கள் செய்வதற்கு விடுமுறை வழங்க முடியும் என அத்தாட்சிப்படுத்தும் தமது நிறுவனத் தலைவரிடமிருந்து பெற்ற கடிதம்.

(இ) தேவைப்படும் அவசியமான வேறு ஆவணங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் வழங்கப்படும்.

**குறிப்பு: மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கேற்ப செயற்பட முடியாத, ஆசிரியரல்லாத விண்ணப்பதாரிகள் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பிப்பதை தவிர்க்கும்படி ஆலோசனை வழங்கப்படுகின்றது.**

## 2.8. சான்றிதழ் வழங்கல்

பட்டமேற் கல்வி டிப்ளோமா திறந்த பல்கலைக்கழக ஒழுங்கு விதிகளுக்கு அமைய வழங்கப்படும்.

## 2.9 கட்டணங்கள்

**மாணவர் பதிவுக் கட்டணமும் போதனைக் கட்டணமும்**

| | |
|---|---|
| பதிவுக் கட்டணம் | ரூபா 1000.00 |
| வசதிக் கட்டணம் | ரூபா 1500.00 |
| நூல் நிலையக் கட்டணம் | ரூபா 200.00 |
| போதனைக் கட்டணம் | ரூபா 54,000.00 |
| கற்பித்தல் பயிற்சி செயற்பாடுகளுக்காக | ரூபா 5000.00 |
| (நிகழ்ச்சித்திட்டத்துக்கான பூரண மாணவர் போதனைக் கட்டணம்) | ரூபா 61,700.00 |

மாணவர்களால் உரிய கொடுப்பனவுகள் இரண்டு தவணை முறைகளில் செலுத்தப்படவேண்டும். பதிவு செய்யும் போது பூரண கட்டணத்தின் 60% இனை கட்டுவதுடன் மிகுதியாக உள்ள 40% ஐ நிகழ்ச்சித்திட்டத்தின் நடுப்பகுதியில் செலுத்துதல் வேண்டும். இறுதிப் பரீட்சையில் சித்தியடையத்தவறும் மாணவர்கள் மீண்டும் தம்மை அப்பாட நெறிகளுக்காகப் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். அப்பாட நெறிகளுக்கு ஏற்ப அவர்கள் கட்டணங்களும் செலுத்த வேண்டியிருக்கும்.

### கற்கைநெறி / நிகழ்ச்சித்திட்டத்தினைப் பிற்போடல்

முழுக்கல்வி நிகழ்ச்சித்திட்டத்தினையும் பிற்போட அனுமதி வழங்கப்படமாட்டாது. கற்கை நெறிகளைப் பிற்போடுவதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் திறமைமட்டம் 8 இற்குக் குறையாத பாடநெறிகளுக்கு பதிவுசெய்தல் வேண்டும்.

நீங்கள் பதிவுசெய்துள்ள கல்வி நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள பாடநெறிகளை பிற்போடுவதற்கான கால எல்லை நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்ததில் இருந்து **2 மாதங்களில்** முடிவடையும். எக்காரணத்தினாலும் இத்தினம் நீடிக்கப்படமாட்டாது. பின்னர் பதிவு செய்கையில் முதலாம் சந்தர்ப்பத்திலும்பார்க்க கூடிய கட்டணம் செலுத்த வேண்டி ஏற்படும்.

### பதிவுசெய்யப்பட்டுள்ள விருப்புக்குரிய பாடநெறிகளை மாற்றுதல்

விண்ணப்பதாரிகள் பதிவுசெய்த விருப்புக்குரிய பாடநெறிகளை மாற்றுதல் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்ததில் இருந்து **2 மாதங்களில்** முடிவடையும். எக்காரணத்தைக்கொண்டும் இக்கால அளவு மாற்றப்படமாட்டாது.

**பதிவு செய்த பாடநெறிகளைப் பிற்போடல் மற்றும் மாற்றம் செய்தல்**

- ✓ **பதிவு செய்து கொண்ட பாடநெறிகளில் புதிய பாடநெறி ஒன்றினைச் சேர்த்தல் / விலக்கிக் கொள்ளுதல் - 21, 22 பெப்ரவரி 2019**
- ✓ **பதிவு செய்து கொண்ட பாடநெறிகளில் பாடநெறி ஒன்றினை விலக்கிக் கொள்ளல் மாத்திரம் - 19 மார்ச்சு 2019**

**பதிவு செய்ததன் பின் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து நீங்குதல்**

பதிவுசெய்த பின் **ஒரு மாதத்தினுள்** செலுத்தப்பட்ட கட்டணத்தில் 10% கழிவுத் தொகையுடன் நிகழ்ச்சித் திட்டத்தில் இருந்து நீங்கிக்கொள்ள முடியும். எவ்வித காரணத்தினாலும் இக்கால எல்லை நீடிக்கப்பட மாட்டாது.

பல்கலைக்கழகம் தெரிவிக்கும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் மாணவர்கள் பதிவு செய்தல் / மீள்பதிவு செய்தல் இயலாது.

## 2.10 நிகழ்ச்சித்திட்ட ஆரம்பம்

இக் கல்வி ஆண்டிற்கான புதிய மாணவர்களுக்கான பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் 2019 ஜனவரி மாதத்தில் ஆரம்பமாகும்.

## 2.11 மாணவர்கள் பின்பற்ற வேண்டியவைகள்

**கவனத்தில் கொள்ள வேண்டியது**

**நிகழ்ச்சித்திட்டத்திற்கு நீங்கள் பதிவு செய்துகொண்டதன் பின்னர் உங்களது மாணவர் அங்கத்துவம் செல்லுபடியாவது பதிவு செய்து கொண்ட கல்வியாண்டு உள்ளடங்கலாக நான்கு (04) வருடங்களுக்கு மாத்திரமாகும். தொடர் கணிப்பீடுகளின் தகைமை நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பதிவு செய்து கொண்ட கல்வியாண்டு நீங்கலாக ஒரு (01) கல்வியாண்டுக்கு மாத்திரமே செல்லுபடியாகும்.**

முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை மாணவர்கள் தமக்கு உரித்தான வலயக் கல்வி அலுவலரிடம் வழங்கி அனுமதி பெற்று அதன் பிரதி ஒன்றைத் தங்கள் சுயவிபரக்கோவையில் இடுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இந்நடைமுறை தங்களுக்குரிய கற்கை விடுமுறையினைப் பெறுவதற்கு உதவியாக அமையும். பின்னர் எவ்வித காரணங்களின் அடிப்படையிலும் விண்ணப்பத்தின் பிரதி வழங்கப்பட மாட்டாது.

## விண்ணப்படிவத்தினை Online மூலம் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்களும் மாதிரி விண்ணப்பப் படிவமும்

INSTRUCTIONS TO COMPLETE THE ON LINE APPLICATION FORM

(1) Login to the Open University web page by typing https://payment.ou.ac.lk/ Then you will see the following page:




If you are a new applicant click the hyper link <Create New Account>

If you are an existing OUSL student, type user name and password and press the login button.

(2). Then you will see the following page



(3). Once you enter all details and click the button <Create Account> you will see the following page:



Welcome to The Open University of Sri Lanka On-line Application System

Edit Account details | Programme Details | Add New Application | My Applications | Log Out

Logged as ranjan

Friday, 27th January 2017

## On-line Application

### Please Fill the Application Details

**Fill the mandatory fields which are mentioned as *.If you need to edit the personal details, go to "Edit Account Details" from the main menu.**

### Programme Data

**Please read the brochure carefully before applying ( Upcoming programmes)**

| | |
|---|---|
| Program* | Bachelors Degree in Science |
| Preferred Center* | Colombo |
| Medium* | English |

### Personal Data

| | |
|---|---|
| Title | Mr. |
| Initial | A.B. |
| LastName | Kumara |
| Name Denoted by Initials | Aruna Bandara |
| Address line 1 | Nawala |
| Address line 2 | Nugegoda |
| Address line 3 | |
| District * | Select |
| NIC/Passport No | 889632546V |
| Date of Birth | 1988-02-24 |
| E mail | kumara@gmail.com |
| Telephone -Mobile | 0714444123 |
| Telephone -Fixed | 0112881000 |
| Country code | LK |
| Civil Status | Select |

(Enter subjects separated by commas (,) Eg:- English A, Maths B, etc.. )

GCE O/L

(Enter subjects separated by commas (,) Eg:- Biology B, Chemistry A, etc.. )

GCE A/L* Biology B, Chemistry A

(Enter Work Experience separated commas (,))

Work Experience

(Enter Qualifications separated by commas (,) Eg:- Details of the Degree, University and Year etc.. )

Other Qualifications

Before you click the "Apply and Pay" button, please double check your application--particularly the **Preferred Center** and the **Medium of Study**. Once you apply, you cannot change application details.

Apply & Pay | Reset

© 2017 The Open University of Sri Lanka. Information Technology Division.

(4). Click <Add New Application>

Then you will see the following page:

